# அஷ்ர.்.ப் நகர் வாழ்வாதாரத் தொழில் மீது இனப் பிரச்சினை ஏற்படுத்திய தாக்கங்கள்: ஒரு சான்றாதார ஆய்வு

ஏ.ஏ.எம். நுபைல்

**அறிமுகம்:**

அஷ்ர.்.ப் நகர் பிரதேசத்தில் 1983ஆம் ஆண்டைத் தொடர்ந்து வாழ்வாதாரத் தொழில் மீது ஏற்பட்ட மாற்றங்களை ஆராயும் இவ் ஆய்வானது, பின்வரும் அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனத்தில் கொண்டுள்ளது. அவையாவன; விவசாய நிலங்களின் நிலவுடைமை, பயிரிடல் முறை, அறுவடை முறை, கூலியமைப்பு முறை, சந்தைப்படுத்தல் மற்றும் மாற்றுப் பயிரிடல்.

இனப்பிரச்சினைக்கு முன்னர் முஸ்லிம்களும் தமிழர்களும் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கியிருந்தே வாழ்ந்து வந்தனர். நிலவுடைமையைப் பொறுத்தவரையிலும் கூட இப்பிரதேச வாழ் முஸ்லிம்களின் பயிரிடல் நிலங்கள் பரவலாக தமிழர்களினதும் சிங்களவர்களினதும் வாழ்விடங்களைச் சுற்றியே காணப்படுகிறன.

விவசாயச் செய்கை முறையானது இரு போக முறையையும் அதற்கான நீர்ப்பாசனமும் கூட வலது கரைக் கால்வாய் மற்றும் இடது கரைக் கால்வாய் மூலம் சிங்களப் பிரதேசத்திலுள்ள நீர்த்தேக்கங்களிலிருந்தே எடுத்துவரப்படுகின்றன.

நிலப் பண்படுத்தல், விதைப்பு, களை பிடுங்குதல், அறுவடை, சந்தைப்படுத்தல் போன்ற அம்சங்கள் பெரிதும் மனித உழைப்பினாலேயே பூர்த்திசெய்யப்படுகின்றன. அத்துடன் இவற்றில் போதிய கைத்திற அறிவும் அனுபவமும் உள்ள தமிழ்த் தொழிலாளர்களிடமிருந்தே இச் சேவைகள் பெறப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் இயல்பு இவ்வாறு இருப்பதன் மூலம் மூவின மக்களும் பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தல் இயற்கையாகவே அமைந்துவிட்டது. ஆனாலும், 1983 மற்றும் 1990களில் ஏற்பட்ட இன முரண்பாடும் இனப்பிரச்சினையும் மேல் கூறப்பட்ட அனைத்து அம்சங்களிலும் உடனடியாகவும் படிப்படியாகவும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

பரஸ்பரம் ஏற்பட்ட அச்சம், பீதி மற்றும் அவநம்பிக்கைகள் மக்களின் சுயாதீனமான நகர்வைப் பாதித்ததுடன் அம்மக்களின் இயல்பு வாழ்க்கையும் கூட சிதைந்து போயிற்று. மக்களின் வருமானத் தேடலுக்கான வாழ்வாதாரங்கள் அவர்களின் வாழ்விடங்களைச் சுற்றி மாத்திரம் இடம் பெற இச் சூழல் நிர்ப்பந்தித்தது. விவசாயப் பயிரிடல் நிலங்கள் சுருங்கத் தொடங்கின. அத்துடன் விவசாயக் கூலிகளின் வருகை முதற் கொண்டு முதலீடு மற்றும் சந்தைப்படுத்தல் வரை அனைத்துமே குறைவடைந்தன.

நிலப் பாவனையில் ஏற்பட்ட குறைநிலை விவசாய உற்பத்திகளைக் குறைவடையச் செய்ததுடன் உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்துக்கும் வருமான வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று. இவை வறுமையையும் தங்கியிருப்பையும் முன்னரைவிட அதிகரிக்கச் செய்தன.

**ஆய்வின் முக்கியத்துவம்:**

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பல்வேறு காரணிகளும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அதற்கேற்ப இன்று வறுமை ஒழிப்பு, கிராமிய அபிவிருத்தி என்பன நாடுகளின் முக்கிய இலக்குகளாக மாறிவருகின்றன. கிராமிய மட்டங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் இலக்குகள் அடையப்பெற்றுள்ளனவா என்பதனை அறிந்துகொள்ள அவை குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்தவகையில் அஷ்ர.்.ப் நகர் வாழ்வாதார அபிவிருத்தியில் இனப் பிரச்சினையும் அது ஏற்படுத்திய மாற்றங்களும் பற்றிய ஆய்வுகள் இன்றுவரை மேற்கொள்ளப்படாத ஆய்வு இடைவெளி ஒன்று காணப்படுகின்றது. இந்தவகையில் இப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் இனப் பிரச்சினை ஏற்படுத்திய மாற்றங்களை அறிந்து கொள்வதில் இவ் ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை:**

*இனப்பிரச்சினையும் முரண்பாடுகளும் சமூகங்களின் மரபு ரீதியான வாழ்விடங்களையும்* அவர்களின் வாழ்வாதாரத் தேடல்களையும் கூர்மையாகப் பாதித்திருப்பதை வரலாற்றுரீதியாக காலம் காலமாக அறிய முடிகிறது. மக்களின் வாழ்வியல் இடப்பெயர்வும் கூட பெருமளவுக்கு இதனை மையமாகக் கொண்டே காணப்படுகிறது.

இனரீதியில் அருகருகே அமைந்துள்ள மூன்று வேறுபட்ட சமூகங்களிடையே இனப்பிரச்சினையானது அம்மக்களின் வாழ்வாதாரத் தொழில்களை எவ்வாறு பாதித்துள்ளது என்பதையும் வாழ்வாதாரத் தொழில் முயற்சிகளில் இடம் பெற்ற பல்வேறுபட்ட மாற்றங்களையும் அறிந்து கொள்ளவதும் இன முரண்பாட்டின் சவால்களிலிருந்து விடுபட அவர்கள் மேற்கொண்ட பல்வேறு உபாயங்களையும் கண்டறிவதே இவ்வாய்வை மேற்கொள்ள என்னைத் தூண்டியது.

**ஆய்வு நோக்கம்:**

அஷ்ர.்.ப் நகர் மக்களின் வாழ்வியல் மூவின சமூகங்கிளின் பரஸ்பர தங்கியிருத்தலில் முற்றிலுமாகக் கட்டுண்டுள்ள ஒரு பிரதேசமாக இருப்பதனாலும் வறுமையும் முன்னேற்றமின்றிய பின்தங்கிய நிலமையும் அங்கு ஏன் தொடர்ந்திருக்கின்றது? இந்நிலை தொடர்திருப்பதற்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற இன வன்முறையும் இடப்பெயர்வும் காரணமாக அமைந்துள்ளதா என்பதைக் கண்டறிவதும் அவசியமாகிறது. அவர்களின் இவ்வாறான துன்பவியிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளைக் கண்டறிவதும் அதன்மூலம் பெறப்படுகின்ற தகவல்களை கொள்கை வகுப்பாளர்களுக்கும் திட்டமிடலாளர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் தெரியப்படுத்துவதுமே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுக் கருதுகோள்:**

மேற் கூறப்பட்ட நோக்கங்கள் பின்வரும் கருதுகோள்கள் மூலம் பரீட்சிக்கப்பட்டன.

- இனமுரண்பாடு அஷ்ர.்.ப் நகர் மக்களின் வாழ்வாதாரத் தொழில்களைப் பாதித்துள்ளது.
- அஷ்ர.்.ப் நகர் மக்களின் வறுமைக்கும் பின்தங்கிய நிலைக்கும் இனப்பிரச்சினை நேர்க்கணியப் பங்களிப்பை வழங்கியுள்ளது.
- அஷ்ர.்.ப் நகர் மக்களின் பிரதான வாழ்வாதரத் தொழிலான சேனைப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட மாற்றத்துக்கு இனமுரண்பாடு நேர்க்கணியப் பங்களிப்பை வழங்கியுள்ளது.

**ஆய்வு முறையியல்:**

இவ் ஆய்வானது பிரதானமாக வரலாற்றுச் சான்றாதாரங்களையும் முதலாம் நிலைத் தரவுகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தரவுகள் பின்வரும் மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. அவையாவன, அரசாங்க அறிக்கைகள், அரசாங்க நிறுவனங்களின் புள்ளிவிபரத் திரட்டுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல் சேகரிப்புத் திரட்டுக்கள் மற்றும் நேரடி களஆய்வும் பேட்டி முறை மூலமும் தகவல்கள் சேகரிக்கபட்டன.

மேற்படி திரட்டப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் கூடியளவுக்கு விமர்சன ரீதியிலமைந்த ஒப்பீட்டாய்வுக்கு உட்பட்டதாகவும் அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்:**


ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட அஷ்ர.்.ப் நகர் பிரதேசமானது, இலங்கையின் கிழக்கு *மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில்* அமைந்துள்ளது. *இப்பிரதேசமானது* அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் கிராமத்தின் கிராம சேவகர் பிரிவு ஒன்றில் காணப்படும் ஒரு கிராமமாகும். இப் பிரதேசமானது, வடக்கே களியோடை ஆற்றினையும், தெற்கே பாலமுனை வயற்காணிகளையும், கிழக்கே ஒலுவில் கிராமத்தையும், மேற்கே தீகவாபி பிரதேசத்தையும் எல்லைகளாகக் கொண்டமைந்துள்ளது.

அஷ்ர.்.ப் நகர் 'ஆலிம்சேனை' என வரலாற்றில் ஏற்கனவே அழைக்கப்பட்டிருந்தது. ஆலிம்சேனை என்ற மரபு ரீதியான பெயரானது மாற்றம் கண்டு பின்னர் ஆலிம் நகர் எனவும் தற்போது (சுனாமிக்குப் பின்னரான மீள்குடியேற்றத்தின் பிறகு) அஷ்ர.்.ப் நகர் என பெயர்மாற்றம் கண்டுள்ளது. அதாவது மறைந்த எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் இக்கிராமத்தின் மீள்குடியேற்றத்துக்கும், புனர்நிர்மாணத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினை நினைவுகூரும் அடிப்படையிலேயே அஷ்ர.்.ப் நகர் என இதற்கு புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது.

5.5 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்ட அஷ்ரஃப் நகரானது, நாலா பக்கமும் வயற்காணிகளாலும், பயிர்ச்செய்கை நிலங்களாலும் சூழப்பட்ட ஓர் அழகிய பாரம்பரியமிக்க கிராமமாகும். இது ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவிலுள்ளது. இதன் கிழக்குப் பகுதியில் தீகவாபி என்ற சிங்களக் குடியேற்றக் கிராமமும் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வரைபடம்: 01

அஷ்ரஃப் நகர் வரைபடம்




தகவல் – சர்வதேச தொழிலாளர் தாபனம் (இலங்கை)

அஷ்ரஃப் நகர் மூன்று பக்கம் வயல் நிலங்களாலும், மற்றய பகுதி அருகி வரும் வளமான பள்ளக்காடு என அழைக்கப்படும் காட்டினாலும் சூழ்ந்து காணப்படும் பிரதேசமாகும். வடக்கே செல்லும் களியோடை வாய்க்கால் அப்பிரதேசத்தின் நீர் வளத்தில் பாரிய செல்வாக்கினைக் கொண்டு காணப்படுகிறது. இங்கு காணப்படும் அதிகமான நிலங்கள் சேனைப் பயிர்ச்செய்கைக்கும், உலர் நில பயிர்ச் செய்கைக்கும் உகந்ததாகக் காணப்படுகிறன.

இப்பிரதேசத்தில் காணப்படும் வளங்களுள் ஒன்றாக செங்கபில நிற மண்ணைக் குறிப்பிட முடியும். இதனைக் கொண்டு மக்கள் சேனைப்பயிர்ச் செய்கையில் அதிக ஆர்வத்தோடு ஈடுபடுகின்றனர். மற்றும் இங்கு கிரவல் எனப்படும் செங்கபில நிற மண் அதிகம் காணப்படுவதினால் அதனை அகழ்ந்து வயல் நிலங்களைப் பெற்று நெற்செய்கை மேற்கொள்கின்றனர். மற்றும் இப்பிரதேசத்தில் ஓடுகின்ற ஆறு மிகவும் முக்கியமான வளமாகக் கொள்ளப்படுகிறது. இவையோடு இம் மக்கள் ஏனைய தொழில்களாக மீன்பிடி, சிறு வியாபாரம், கூலி என்பனவற்றிலும் ஈடுபடுகின்றனர்.

ஆய்வுப் பிரதேசத்தின் காலநிலையை நோக்கின் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் அஷ்ரஃப் நகர் அமைந்து காணப்படுவதால் இக்கிராமம், டிசம்பர் – பெப்ரவரி வரை வடகீழ் பருவப்பெயர்ச்சி காற்றினால் 1500 – 2000 மில்லி மீற்றர் மழையைப் பெறுகின்றது. இங்கு நிலவும் வெப்பநிலை சராசரியாக $27^{0}$c – $30^{0}$C வரை வேறுபடுகின்றது (வளிமண்டல திணைக்களம்). இக் காலநிலையைப் பிரதிபலிப்பதாகவே இப்பிரதேசத்தின் பயிர்ச் செய்கைகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் என்பன காணப்படுகின்றன.

**ஆய்வுப் பிரதேசத்தின் வரலாற்றுப் பின்னணி:**
அஷ்ர.்.ப் நகர் வரலாறு என்பது நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதாகும். இது சுமார் 250 வருடங்களுக்கு முன் சேனைப் பயிர்ச் செய்கை நிலத்தினை நாடி வந்த தொழிலாளர்களினால் உருவாக்கப்பட்ட தொழில் கிராமமாகும். அக் காலப்பகுதியில் அஷ்ர.்.ப் நகரானது பள்ளக்காடு என்றே அழைக்கப்பட்டது. பின்னர் சேனைப்பயிர்ச் செய்கைக்காக மக்கள் வருகைதந்ததினால் இது ஒரு கிராமமாக மாறியது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த மக்களினால் இப்பிரதேசம் ஆலிம்சேனை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அக்காலப்பகுதியிலேயே இம்மக்கள் தமக்கான சமய வழிபாட்டுத் தலத்தினை (பள்ளிவாசல்) அமைத்தும் கொண்டனர். 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட சிறந்த காலநிலை காரணமாகவும் இப்பகுதியை நோக்கிய மக்களின் அதிக வருகை காரணமாகவும் இங்கு சேனைப் பயிர்ச் செய்கையானது சிறந்த விளைச்சலை வழங்கியது. இதன் விளைவாக இக்கிராமம் சோளம், கச்சான், மரக்கறி, வாழைப்பழம் போன்றவற்றுக்கு பிரசித்தி பெற்று விளங்கியதைக் குறிப்பிடலாம்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட ஒலுவில், பாலமுனைப் பிரதேச மக்களுக்கு மீள்குடியேற்றத்திற்காக அஷ்ர.்.ப் நகர் தெரிவு செய்யப்பட்டு அம்மக்களுக்கு வீடுகளும் நிலங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. 2004இல் அக்கரைப்பற்று பிரதேசத்திலும் ஆலிம் சேனை எனும் கிராமம் காணப்படுவதன் காரணமாக, ஆலிம் நகராக பெயர்மாற்றம் பெற்றது.

2007ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டம் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளரின் உதவியுடன் ஆலிம் நகர் என்ற பெயர் அஷ்ர.்.ப் நகராக உத்தியோக பூர்வமாகப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர் அங்கு அமைக்கப்பட்டிருக்கும் மீள்குடியேற்றத்தின் விளைவாக பல சர்வதேச தொண்டர் தாபனங்களின் கவனமும் இக்கிராமத்தின் மீது திரும்பியது. இதனடிப்படையில் இங்கு பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. வீதி அமைப்புக்கள், நீர்த் தாங்கி, மின்சாரம், சனசமூக நிலையங்கள், பாடசாலைக் கட்டிடங்கள் என்பன அமைக்கப்பட்டன.

## அஷ்ர.்.ப் நகரின் சமூக நிலை

**குடும்பம்:**
அஷ்ர.்.ப் நகர் கிராமத்தின் குடும்ப அமைப்பானது ஆரம்பத்தில் கூட்டுக் குடும்ப அமைப்பினை அதிகமாக கொண்டிருந்தது. இக்கூட்டுக் குடும்ப அமைப்பில், வீட்டுத் தலைவரே தொழிலில் ஈடுபட்டு குடும்ப அங்கத்தவர்களைக் காப்பாற்றும் நிலை காணப்படுகிறது. ஆய்வுப் பிரதேசமான அஷ்ர.்.ப் நகரின் குடும்பக் கட்டமைப்பானது, முஸ்லிம் சமுதாயத்துக்குரிய சிறப்பியல்புளைக் கொண்டிருக்கின்றன. இங்கு ஆண்களே வேலைக்குச் செல்பவர்களாகக் காணப்படுகின்றனர். பெண்கள் வீட்டிலயே சமையலுடன் கூடிய வீட்டு வேலைகள், வீட்டுத் தோட்டப் பராமரிப்பு என்பவற்றில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

இங்கு வாழும் மக்கள் நன்னீர், உவர்நீர் மீன் பிடித்தொழிலிலும் ஈடுபடுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். ஆரம்பத்தில் சேனைத் தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆனால் இன்று சிறு கைத்தொழில்கள், கூலித் தொழில்கள் போன்றவைகளையும் மேற்கொள்கின்றனர். இப்பிரதேசம் கிராமியப் பகுதி என்பதனால், இம்மக்களின் சனத்தொகைப் பெருக்கமானது சற்று அதிகமாகவே காணப்படுகிறது. அத்துடன் இங்கு பயங்கரவாதத்தினாலும், யானைகளுக்கும் மனிதனுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளின் காரணமாகவும் இடப்பெயர்வுகளின் காரணமாகவும் சனத்தொகை சிலவேளைகளில் ஏற்றத்தாழ்வைக் கொண்டிருக்கும். ஆனால், இச் சனத்தொகை மாற்றமானது பாரிய அளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

அட்டவணை இல: 01

**அஷ்ர.்.ப் நகரின் குடும்ப ரீதியான தகவல்கள் (2008)**

| வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| மீனவக் குடும்பங்கள் | 20 |
| விவசாயக் குடும்பங்கள் | 35 |
| சுயதொழில் குடும்பங்கள் | 10 |
| ஏனையவை | 28 |
| மொத்தக் குடும்பங்கள் | 93 |

ஆதாரம்: அட்டாளைச்சேனை பிரதேச சமுர்த்தி பிரிவு 2008

ஆனால், தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், நவீனத்துவ போக்குகளின் காரணமாகவும், பொருளாதார நெருக்கடிகள் காரணமாவும் பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இன்று குடும்பக் கட்டமைப்பு நிலையில் போதியளவு மாற்றம் ஏற்பட்டு வருவதனைக் காணலாம்.

குடும்பங்கள் வசிக்கும் வீடுகள் பெரிதாக இல்லாமல் சிறிய குடிசைகளாகவும், சிறிய கல் வீடுகளாகவும் காணப்படுகிறன. இவ்வீடுகளில் கூட்டுக் குடும்பங்ளாகவும் தனிக் குடும்பங்களாகவும் மக்கள் வாழ்கின்றனர். அதிகமான மக்கள் தமது வீடுகளில் வீட்டுத் தோட்டங்களைச் செய்கின்றனர். இதன்போது குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்தே தோட்ட பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுகின்றனர். மேலும் குடும்பங்களின் வீட்டுத்தொழிலாகப் பாயிழைத்தல், பனையோலை பாவனைப் பொருட்கள், மிருக வளர்ப்பு போன்றவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அஷ்ர.்ப் நகரில் காணப்படும் சமுதாய முன்னேற்ற அமைப்புகளாக கிராமிய அபிவிருத்திச் சங்கம், பெண்கள் அபிவிருத்திச் சங்கம், மீனவச் சங்கம், விவசாயச் சங்கம், சமுர்த்திச் சங்கம் என்பன காணப்படுகின்றன.

பால் அடிப்படையில் நாம் சனத்தொகைப் போக்கினை நோக்கும்போது, அஷ்ர.்ப் நகரில் பெண்களை விட ஆண்கள் அதிகமாயினும் பாரிய வேறுபாட்டைக் காணமுடியாதுள்ளது.

அட்டவணை இல: 02

அஷ்ர.்ப் நகரத்தின் பால் ரீதியான சனத்தொகை

| பால் | எண்ணிக்கை |
|---|---|
| ஆண்கள் | 230 |
| பெண்கள் | 240 |
| மொத்தம் | 470 |

தகவல் – சர்வதேச தொழிலாளர் தாபனம் (இலங்கை கிளை) 2007

இன ரீதியாக நாம் சனத்தொகையை நோக்கும்போது இந்த கிராமத்தில் 100% முஸ்லிம்கள் மட்டுமே வாழ்கின்றனர். அயலில் உள்ள கிராமங்கள் சிங்கள, தமிழ் இனத்தவர்கள் வசிக்கும் கிராமங்களாக இருப்பினும் அஷ்ர.்ப் நகர் கிராமத்தைப் பொறுத்தவரை வேறு இனங்களின் குடியேற்றங்கள் இல்லை.

**அஷ்ர.்ப் நகரத்தின் வாழ்வாதாரத் தொழில்கள்:**
அஷ்ர.்ப் நகர் கிராமத்தின் பொருளாதார நிலையை நோக்கும்போது, இங்கு சேனைப் பயிர்ச் செய்கை பிரதான தொழிலாகவும் ஏனைய தொழில்களாக நெற்செய்கை, மீன்பிடி, கல்வெட்டுதல், மண்ஏற்றுதல், கூலி போன்ற தொழில்களும் காணப்படுகின்றன. அத்தோடு சிறு வியாபாரமும் ஓரளவு காணப்படுகிறது. ஆனால் இது பருவகாலத் தொழிலாக மட்டுமே காணப்படுகின்றது.

இக்கிராமத்தைப் பொறுத்தவரை சேனைப் பயிர்ச்செய்கையானது பிரதான தொழிலாகக் காணப்பட்டாலும், அதனோடு இணைந்த ஏனைய தொழில்களும் முதலிடத்தைப் பெறுகின்றன. சேனைப் பயிர்ச்செய்கையில் சோளம், கச்சான், இறுங்கு, மரவள்ளி போன்றன பயிரிடப்படுகின்றன. அத்தோடு பழவகைகள், கீரைவகைகள் என்பனவும் பயிரிடப்படுகின்றன.

சிறு கைத்தொழில்களாகப் பாயிழைத்தல், பெட்டியிழைத்தல், அப்பம் சுடுதல், என்பன காணப்படுகின்றன. இதில் பெண்களே ஈடுபடுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இங்கு வாழும் சனத்தொகை குறைவாகக் காணப்படுவதனால், சிறு கைத்தொழில்களானது போதிய வருமானத்தை வழங்கக் கூடியதாக இருக்கவில்லை.

இங்கு பொருட்களைப் பெறுதல் என்பதைப் பார்க்கின்றபோது கூட்டுறவுக் கடைகளோ, பாரிய வியாபாரக் கடைகளோ கிடையாது. மக்கள் தமக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கு ஒலுவில், பாலமுனைப் பிரதேசங்களுக்குச் சென்றே பெற வேண்டியுள்ளது.

**விவசாயமும் விலங்கு வேளாண்மையும்**
அம்பாரை மாவட்டம் விவசாயத்தில் சிறந்து விளங்கும் பிரதேசம் என்றவகையில் அஷ்ர.்ப் நகர் பிரதேசத்திலும் முதலாம் இடத்தை சேனைப்பயிர்ச் செய்கையும் இரண்டாம் இடத்தை நெற்செய்கையும் பிடித்துள்ளது.

இங்கு, சோளம், கச்சான், மரவள்ளி, இறுங்கு போன்றன பயிரப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் சோளத்திற்கு நல்ல கேள்வி காணப்படுகின்றது. இதனால் மக்கள் தொடர்ந்தும் இச்சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். சோளமானது விற்பனைக்காக வெளியே கொண்டு செல்லப்படுவதை விட வெளியூர் வியாபாரிகள் இக்கிராமத்துக்கே வந்து பெற்றுச் செல்லும் நிலையே அதிகமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கச்சான், மரவள்ளி செய்கைகளே சோளச் செய்கைக்கு அடுத்ததாக மேற்கொள்ளப்படும் தொழில்களாகும். சோள அறுவடை நடந்ததன் பிற்பாடு மரவள்ளி, கச்சான் உற்பத்தியில் மக்கள் அதிகம் கவனம் செலுத்துகின்றனர். 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசினால் இறுங்குச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இறுங்கும் இங்கு நல்ல விளைச்சலை வழங்குவதனைக் காணலாம். 2004இற்குப் பின் அறிமுகப்படுத்தப்பட்ட சனல் செய்கையும் இங்கு மேற்கொள்ளப்படுகிறது. மக்களின் போதிய வரவேற்பை இது பெறவில்லை என்பதால் அது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

நெற்செய்கையைப் பொறுத்தவரை இக்கிராமத்தைச் சுற்றி வயல் நிலங்கள் காணப்படுகின்றன. என்றபோதிலும் இக்கிராம மக்களுக்குச் சொந்தமாக 30 ஏக்கர் விவசாய நிலங்கள் மாத்திரமே காணப்படுகிறன. இதனால் இங்கு வாழும் மக்கள் வயல் வேலைகளுக்குக் கூலிக்குச் செல்வதனையே அதிகம் காணலாம். இது பருவகாலத் தொழிலாகக் காணப்படுவதனால் விவசாயிகள் இரட்டைத் தொழிலை மேற்கொள்வதைக் காணலாம்.

அத்தோடு அங்கு வாழும் மக்களில் 10%மானோர் மிருக வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். இதன்மூலம் தமது வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றனர். இங்கு காணப்படும் அதிகமான நிலத்தின் காரணமாக இது சாத்தியப்பாடுடையதாகக் காணப்படுகின்றது.

**கைத்தொழிலும் வியாபாரமும்**

இக்கிராமத்தில் சிறிய அளவிலான வியாபாரங்களே காணப்படுவதனால் இத்துறை பெரியளவிலான வளர்ச்சியைக் காட்டவில்லை. வியாபாரம் இப்பகுதியில் வளர்ச்சியடையாததற்குக் காரணம், இங்கு மக்கள் குறைவாக வாழ்வதும் மூலதனப் பற்றாக் குறையுமாகும்.

கைத்தொழிலைப் பொறுத்தவரை சிறுகைத்தொழில்களே காணப்படுகின்றன. பாயிழைத்தல், பெட்டியிழைத்தல், தயிர் உற்பத்தி, அப்பம் சுடுதல் போன்றன காணப்படுகின்றன. இவை பாரிய அளவில் மேற்கொள்ளப்படவில்லையாயினும், இங்கு வாழும் குடும்பங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஓரளவு செல்வாக்கை இத்தொழில்கள் செலுத்துகின்றன.

**சேவைகள் துறை**

சேவைத்துறையை அரச சேவை, தனியார் சேவை என இரண்டாக நோக்க முடியும். அஷ்ரஃப் நகரின் அரச சேவைத்துறையை நோக்கும்போது சுகாதார நிலையம், மின்சார சேவை, பாடசாலை போன்றன மட்டுமே காணப்படுகிறன. இங்கு வங்கி வசதிகளோ தபால் சேவை வசதிகளோ கிடையாது. மக்கள் தமது வங்கி, தபால் தேவைகளுக்கு ஒலுவில், பாலமுனைப் பிரதேசங்களுக்குச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு செல்கின்றபோது போக்குவரத்து வசதிகள் இன்மையின் காரணமாகப் பெரிதும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

தனியார் சேவைத்துறையில், அதிகளவான தொண்டர் நிறுவனங்கள் தமது சேவைகளைப் புரிந்துள்ளன. வீதியமைப்புக்கள், வீடமைப்புகள், நீர்வழங்கல், சிக்கன கடன் திட்டங்கள், சேமிப்புத் திட்டங்கள், விதைகள் வழங்குதல் என்பனவற்றைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும். இங்கு, சேவைத் துறை அமைப்புகளாக Save The Children, Jarman Red Cross, British Red Cross, Forut, Solider, UNO, IOM, Islamic Reliefe போன்றவற்றைக் குறிப்பிட முடியும். போக்குவரத்தினைப் பொறுத்தவரை தனியார் முச்சக்கர வண்டிகள், உழவு இயந்திரங்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

**மீன்பிடித்துறை**

மீன்பிடியானது நன்னீர், உவர்நீர் மீன்பிடிகள் என இரண்டு வகையாக மேற்கொள்ளப்படுகிறது. அஷ்ரஃப் நகரின் நன்னீர் மீன்பிடித்துறையை நோக்கும்போது, குறைவான வீதத்தினரே நன்னீர் மீன்பிடித்துறையில் ஆர்வம் காட்டிவருகின்றனர். நன்னீர் மீன்பிடி களியோடை ஆறு, அடங்காட குளம், கரடிக் குளம் என்பவற்றில் மேற்கொள்ளப்படுகிறது.

உவர் நீர் மீன்பிடித்துறையை நோக்கும்போது, ஆரம்ப காலங்களில் இங்கு வாழ்ந்த மக்கள் உவர் நீர் மீனபிடித்துறையில் அதிக ஆர்வம் கொண்டிருக்கவில்லை. போக்குவரத்துப் பாதைகள் மோசமடைந்து இருந்தமை, மின்சார வசதியின்மை, மிருகங்களின் தொல்லை போன்ற காரணத்தினால் உவர்நீர் மீன்பிடித்துறை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

2004ஆம் ஆண்டிற்கு பின் அஷ்ர.்ப் நகரின் உவர் நீர மீன்பிடித்துறையானது எழுச்சி கண்டது எனக் கூறலாம். இதற்கு முக்கிய காரணம் ஒலுவில் கடற்கரையோர மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டமையாகும். அத்தோடு பாதைகள் சீரமைப்பு, மின்சார வசதி போன்றவற்றின் காரணமாகவும் உவர் நீர் மீன்பிடித்துறையானது முன்னேற்றம் கண்டு வருவதனைக் காணலாம்.

**தொழில் நிலை**

அஷ்ர.்ப் நகர் கிராமத்தினது தொழில்வாய்ப்பைப் பொறுத்தவரை 90%மான மக்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுள்ளனர். வேளாண்மை, சேனைப் பயிர்ச்செய்கை, மந்தை வளர்ப்பு மீன்பிடி போன்றவற்றில் இளைஞர்கள் அதிகம் ஈடுபடுகின்றனர். இங்கு கல்வித் தரமானது மக்கள் மத்தியில் குறைவாகக் காணப்படுவதன் விளைவாகப் பாரபட்சம் இன்றி தொழில்களில் ஈடுபடுவதனைக் காணலாம்

இங்கு அரச சேவைத்துறையில் வேலைவாய்ப்பை ஒரு சிலர்கள் மாத்திரமே பெற்றுள்ளனர். என்ற போதிலும் அவர்கள் உயர் உத்தியோகத்தவர்கள் அல்லாது சாதாரண உத்தியோகத்தர்களாகவே காணப்படுகிறனர்.

பெண்களின் தொழில் வாய்ப்பில் சிறுகைத்தொழில்கள், மந்தை மேய்ப்பு, சேனைப் பயிர்ச் செய்கை என்பன முக்கிய இடம்பிடித்துள்ளன. குடும்பத்தில் உள்ள அனைவருமே சேனைப் பயிர்ச் செய்கை, மந்தை மேய்ப்பு போன்றவற்றில் பங்கு கொள்வதனால் தொழில் இல்லாத நிலை குறைவாகவே காணப்படுகின்றது.

அட்டவணை இல: 03

அஷ்ர.்ப் நகர மக்களின் நாளாந்த வருமானம் (2008)

| குடும்பங்கள் வீதத்தில் | வருமானம் (ரூபாயில்) |
|---|---|
| 75 | 200 |
| 8 | 500 |
| 8 | 800 |

ஆதாரம்: அட்டாளைச்சேனை பிரதேச அலுவலகம் – சமுர்த்தி பிரிவு 2008

**சேனைப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட மாற்றங்களள்:**

**வரலாறு**

கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அஷ்ர.்ப் நகர் மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழிலாகச் சேனைப் பயிரிடல் இருந்து வருகின்றது. பரம்பரை பரம்பரையாகக் காட்டு நிலங்களைப் பண்படுத்தி வருடத்துக்கு இரு முறை முழுவதும் மழை நீரை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு சோளம், இறுங்கு போன்ற தானியங்களையும் மரவள்ளி, நிலக் கடலை, சுரக்காய் போன்ற காய்கறி வகைகளையும் பப்பாசி, வாழை போன்ற பழவகைகளையும் பயிரிட்டு வருகின்றனர். இப் பயிரினங்கள் அதிகளவு நீரை நுகர்வதில்லை என்பதனால்தான் இவை மாத்திரம் பயிரிடப்படுகின்றன. அத்துடன் நீண்ட காலப் பராமரிப்பும் கூட இதற்குத் தேவைப்படுவதில்லை. எனவே, மக்கள் குறிப்பிட்ட சில காலங்களுக்கு மாத்திரம் தற்காலிகமாகத் தங்கியிருந்து அறுவடைக்குப் பின்னர் சொந்த இடங்களுக்குச் சென்றுவிடுவதாகவும் இருந்தனர்.

இதனால்தான் 1950இற்கு முன்னர் வரை நிரந்தரக் குடியேற்றம் என்ற அம்சம் இங்கு இருந்திருக்கவில்லை. அதாவது, குறிப்பிட்ட பயிரிடல் காலங்களில் காலை முதல் மாலை வரை அப்பிரதேசத்தில் தற்காலிகமாகத் தங்கியிருந்து இரவு வேளைகளில் தமது சொந்தப் பிரதேசங்களுக்குச் சென்றனர்.

இடைப்பட்ட காலத்தில், இனப்பிரச்சினையும் சிவில் யுத்தமும் ஏற்படும் வரைக்கும் பயிரிடல் நிலம் பற்றிய உரிமையோ, அனுமதிப் பத்திரம் குறித்த தேவையோ ஏற்பட்டிருக்கவில்லை. பரம்பரையாக நிலப் பாவனை வம்சாவழியாக இருந்து வந்ததுடன் அரசாங்கத்தின் தடையோ அல்லது வேறு தடைகளோ ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், ஆயுதப் போராட்டத்துக்குரிய

மறைவிடமாகவும் மறைவான போக்குவரத்துப் பாதையாகவும் போராளிக் குழுக்களால் இப் பிரதேசம் பயன்படுத்தப்பட ஆரம்பித்ததனால் முதன் முறையாக சேனைப் பயிர்ச் செய்கை இடர்பாட்டை எதிர்கொள்ள ஆரம்பித்தது.

மேலும், சிங்கள மக்களது கலை கலாசாரப் பாரம்பரியங்கள் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்தமையும் அதனுடன் ஒட்டிய அரசியல் கட்சிகளின் வியூகங்களும் மாற்றமடைந்ததையடுத்து “புனிதப் பிரதேசம்” (Holy Land Area) எனும் சுலோகம் முதன்மை பெறத் தொடங்கியமையடுத்து இப்பயிரிடல் நிலங்களின் உரிமைச் சர்ச்சை முதன் முறையாக எழுப்பப்பட்டது. ஏலவே, நில உரிமை குறித்த எழுத்துமூல ஆவணம் இல்லாமை நிலமையை மேலும் சிக்கலுக்குள் இழுத்துவிட்டது. சமகாலத்தில், முஸ்லிம்களின் அரசியல், கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்விடம் பற்றிய விழிப்புணர்வு அதிகளவில் உணரப்பட்டமையினால் அவர்களும் நில உரிமையை வலியுறுத்த ஆரம்பித்தனர்.

எனவே, தமது பரம்பரை உரிமைக்கான ஆதாரங்களைத் தேட ஆரம்பித்தனர். இது பற்றி இப்றாலெப்பை அலியார் (64) என்பவர் பின்வரும் அம்சங்களைக் குறிப்பிடுகின்றார். ஏ.எம்.ஏ. அஸீஸ் எனும் அரசாங்க அதிபர் 1942ஆம் ஆண்டு அஷ்ர.்.ப் நகரைச் சுற்றியுள்ள பள்ளக்காடு, ஆலிம் காடு, கரையான் காடு, காட்டு வட்டை, கரடிக் குளம், வெள்ளைக் கல் தோட்டம், அடம்பன் குளம் போன்ற இடங்களிலுள்ள விவசாய நிலங்களை அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை மக்களுக்குத் தலா 5 ஏக்கர் வீதம் வழங்கியதாகவும் இக்காணிகளில் வரம்பு அமைக்கவும், களை பிடுங்கவும், நிலத்தைப் பண்படுத்தவும், விதைப்பு மற்றும் அறுவடைக்காகவும் பெண்கள், சிறுவர்கள், ஆண்கள் பலரும் சென்று வந்துள்ளனர். இவ் விவசாயக் குடியான்கள் மிகவும் ஏழைகளாக இருந்தமை காரணமாக, இப் பிரதேசம் மட்டக்களப்புக் கச்சேரியின் நிர்வாகத்தின் கீழ் இருந்தபோது 1951இல் அப்போதைய அரசாங்க அதிபராக இருந்த கணபதிப்பிள்ளை என்பவரால் காடு வெட்டி நிலத்தில் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளத் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 1972ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டார நாயக்க அவர்களின் அரசாங்கத்தால் முறையான குடியேற்றத் திட்டத்தின் கீழ் ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சாய்ந்தமருது போன்ற இடங்களில் வாழ்ந்து வந்த 272 ஏழைக் குடும்பங்களுக்கு தலா 3 ஏக்கர் வீதம் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது (இ. அலியார் 64).

**இனப்பிரச்சினையும் அதன் விளைவும்**:

இவ்வாறு அமைதியாக வாழ்ந்து வந்த இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையும் வாழ்வாதாரத் தொழிலும் 1983ஆம் ஆண்டில் ஏற்பட்ட இன முரண்பாடு பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன்போது ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையையடுத்து ஆலிம் காடு வீடுகளில் இடம்பெற்ற கொள்ளை, களவு முயற்சிகளும் 1988இல் தீகவாபி பிரச்சினையின்போது 45 சிங்கள மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டமையும், 1990 ஜுன் 10ஆம் திகதி சரணடைந்த முஸ்லிம் பொலிசார் தமிழ் ஆயுதக் குழுக்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமும் அஷ்ர.்.ப் நகர் மக்களின் வாழ்வாதாரத் தொழில்களில் மாற்றத்தை ஏற்படுத்திய முக்கிய நிகழ்வுகளாக எடுத்துக் காட்டத்தக்கன.

1993 ஜுலைக்குப் . பின்னர், சுமார் 85 குடும்பங்கள் ஒலுவில் மத்திய பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றனர். இக் குடும்பங்களில் சில தமது ஜீவனோபாயத்துக்காக ஆழ்கடல், கரைவலை, மாயவலை மீன் பிடி முறைகளில் ஒன்றைத் தெரிவு செய்து கொண்டன. இன்னும் சிலர் செங்கல் வெட்டுதல், விவசாயக் கூலி, தச்சுத் தொழில், மேசன் போன்றவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து கொண்டனர். இவ் இடம்பெயர்வானது, இடம்பெயர் குடும்பங்களின் சிறுவர் கல்விக்காகவும் தீகவாவி இராணுவ முகாம் இராணுவத்தினரின் பாதுகாப்பு உத்தரவு இன்மையாலும் நீடித்திருந்தது.

1988இல் 156 குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஒலுவில்-2இல் தற்காலிகமாகக் குடியேறியிருந்தனர். சில காலங்களின் பின்னர் 12 குடும்பங்கள் மீண்டும் பழைய இருப்பிடம் திரும்பியிருந்தனர். இக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்காகச் சேனைப் பயிர்ச் செய்கையையே மீண்டும் தெரிவு செய்து கொண்டனர். இவர்களின் விளைச்சல்கள் ஒன்றில், நிந்தவூர், கல்முனை, அக்கரைப்பற்று போன்ற இடங்களுக்கு அவர்களால் சந்தைப்படுத்தப்பட்டன அல்லது, சிங்களப் பிரதேசங்களிலிருந்து வருகை தரும் வியாபாரிகளால் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டன.

இடைக் காலத்தில், நில நிர்வாகம் அம்பாரைக் கச்சேரியின் கீழ் எடுத்துவரப்பட்டமையினால் ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தினைப் புதுப்பிக்க வேண்டும் என கச்சேரி நிர்வாகம் கேட்டுக் கொண்டபோது ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், அரசியல் மற்றும் இன

ரீதியான வேறுபாடுகள் ஆழமாக ஊடுருவியதையடுத்து நிரந்தர உறுதிப் பத்திரம் இதுவரை வழங்கப்படவே இல்லை என்பது அஷ்ரஃப் நகர் மக்களின் நீண்டகால அங்கலாய்ப்பாகும்.

இராணுவத்தினரால் இப்பிரதேசம் மோதல் நடைபெறக் கூடிய இடம் எனத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டமையினால் ஆக நான்கு (4) குடும்பங்கள் மாத்திரமே 1996இல் இங்கு வாழ்ந்து வந்தன. 1997இல் மேலும் ஒரு குடும்பம் குடிவந்ததாயினும் 1997 மத்தியில் ஏற்பட்ட அச்சுறுத்தலையடுத்து எல்லாக் குடும்பங்களுமே மீண்டும் இடம்பெயர்ந்து விட்டன.

2002ஆம் ஆண்டில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தையடுத்து ஏற்பட்ட சுமுக நிலைமை காரணமாக சுமார் 90 குடும்பங்கள் மீண்டும் இங்கு வந்து குடியேறினர்.

முன்னர் சராசரியாக 3 முதல் 4 ஏக்கர் வீதம் ஒவ்வொரு குடும்பமும் சேனைப் பயிர்ச் செய்கைக்காக வைத்திருந்தனர். ஆனால், 'புனித நிலம் மீட்பு' திட்டத்தின் காரணமாகவும், சுற்றுச் சூழல் சட்டதிட்டம் காரணமாகவும் இப்போது ஒரு குடும்பத்துக்குக் கால் (¼) ஏக்கர் முதல் அரை ($^1/_2$) ஏக்கர் என்றளவிலேயே உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் கூட நிரந்தர உத்தரவுப் பத்திரமன்றி தற்காலிகமானதாகவே உள்ளது. ஆயினும், புத்தசாசன அமைச்சினால் வழங்கப்பட்ட எழுத்து மூல உறுதி மொழியடுத்து நிலம் மீண்டும் பறிபோகும் என்ற அச்சம் தற்போது நீங்கியுள்ளது.

நிலவுடைமையில் ஏற்பட்ட மேற்படி அபிவிருத்திக்குப் புறம்பாக பயிரிடல் முறையிலும் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக முன்னர் நிலத்தைப் பண்படுத்தல், பயிரிடல், களை பிடுங்குதல், பசளையிடல், நீர்ப்பாசனம் போன்றன மிகச் சிறியளவிலேயே வேண்டப்பட்டிருந்தன. அல்லது தேவைப்பட்டிருக்கவில்லை. இது பயிரிடப்பட்ட உணவுப் பயிரின் இயல்பில் தங்கியிருந்தது. மிகக் குறைந்தளவான மனித உழைப்பு அதாவது, ஒரு குடும்பத்தவர்களாலேயே பயிர் பாதுகாப்பு முதல் பராமரிப்பு போன்ற சேவைகளையும் வழங்கக் கூடியதாக இருந்தது. இதனால், உற்பத்திச் செலவும் கூட குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. ஆனால், இப்போது இயந்திரங்கள், கிருமி நாசினி, இரசாயன உரம் போன்றவற்றின் பாவனையும் ஆழ் கிணற்றிலிருந்து நீர்ப்பாசனமும் பயன்படுத்தப்படுகின்றது. இதனால், உற்பத்திச் செலவு 5,000 ரூபாய்கள் முதல் 6,000 ரூபாய்கள் வரை தேவைப்படுவதுடன் யானை மற்றும் ஏனைய மிருகங்களிடமிருந்து பாதுகாப்புப் பெற வேலியிடவும் வெடிமருந்து போன்றவற்றுக்கும் செலவு ஏற்படுவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சமாதான ஒப்பந்தத்தையடுத்து அரசாங்க, மாகாண சபை அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் சில பரீட்சாத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தவகையில், புதிய பயிரினங்களாக சணல்புரி, உழுந்து மற்றும் புதிய வாழை இனங்கள் பரீட்சிக்கப்பட்டன. அவற்றில் வாழை மாத்திரமே வெற்றியளித்திருந்தது. மற்றயவற்றுக்குப் போதிய நீர்வசதி இல்லாததால் ஆழ் கிணறு அமைக்க வேண்டி ஏற்பட்டது. அதற்கு சுமார் 50,000 ரூபாய்கள் வரை தேவைப்பட்டதால் ஏழை விவசாயிகளால் அவ்வாறானதொரு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முடியவில்லை. ஆழ் கிணறு அமைத்துக் கொள்வதற்கான உதவி கிடைக்குமானால் கரும்பு மற்றும் புகையிலை போன்ற பணப் பயிரிடலிலும் ஈடுபட்டு தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்பது விவசாயிகள் பலரதும் கருத்தாகவுள்ளது.

முன்னர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 முதல் 5 நபர்கள் 4 ஏக்கர் நிலத்தை 24 மணிநேரமும் பராமரிக்க முடிந்ததாகவும், இப்போது ஓர் கூலி ஆள் 4 மணிநேரம் மாத்திரம் (காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை) உழைக்க விரும்புவதாகவும் அதன் காரணமாக சுமார் 10 முதல் 20 வரையான தொழிலாளர்களை ஈடுபடுத்த வேண்டியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இச் செய்முறை சேனைப் பயிர்ச்செய்கையை இன்னும் பிழைப்பூதிய மட்டத்திலேயே தொடர்ந்திருக்கச் செய்துள்ளது.

வளமிக்க பயிரிடல் நிலங்கள் புனித நிலம் எனும் கருத்திட்டத்தின் கீழ் எல்லையிடப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டதனால், மக்களிடம் இப்போது எஞ்சியிருப்பது வளமற்ற குடியிருப்புக்கு மாத்திரமே பொருத்தமான அல்லது நீர்பாசனத்துக்குப் பொருத்தமற்ற மேட்டு நிலங்களே. இது சேனைப் பயிரிடல் முறையிலிருந்து மக்களை வேறு முன்னேறிய பயிர்ச் செய்கையை நோக்கிய நகர்வை தாமதப்படுத்தி வருகின்றது.

இன்னும், சேனைப் பயிரிடலில் இயந்திரங்கள், இரசாயன வளமாக்கிகள், இரசாயனக் கிருமி நாசினிகள் போன்றவற்றின் பாவனையை அதிகரிக்கச் செய்ததுடன் ஆழ் கிணற்றிலிருந்து நீரை மேல் எடுத்துவருவதற்கு நீர் இறைக்கும் இயந்திரத்தின் அறிமுகத்தையும் அதற்கான

ஏரி பொருள் பாவனையையும் தூண்டச் செய்து அதிகளவான மூலதனவாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மொத்தத்தில் இச் செய்முறையானது, ஏழை விவசாயிகளின் கடன் சுமையைப் பெருக்கமடையச் செய்ததுடன் குறிப்பாக- முதலாளித்துவப் பொறிக்குள் சிக்குண்டுள்ள அம்மக்களைத் தொடர்ந்தும் விவசாயக் கூலிகளாக நீடித்திருக்க வைத்திருப்பதே நிதர்சனமாகும்.

**முடிவுரை:**

மூலப் பொருட்களின் உள்ளீடுகளில் பதிலீடுகள் அதிகளவில் இடம்பெறுவதற்கு இனப்பிரச்சினை காரணமாயிற்று. அதாவது, மரபு ரீதியானவையாகவும் பிரதேசத்துக்குள்ளேயே பெறக்கூடியவையாகவும் இருந்த மூலப் பொருட்களின் தொடர்ச்சியான கிடைப்பனவுக்கு இனப்பிரச்சினை தடையை ஏற்படுத்தியது. இது உற்பத்தியாளர்களை மாற்று வழி முறையை நாடிச் செல்லத் தூண்டியது. இவை ஒன்றில், மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலிருந்து அல்லது மாவட்டத்திற்கு வெளியிலிருந்து எடுத்து வரப்பட்டன.

மூலதனவாக்கத்தில் அதுவரை இருந்து வந்த மரபு வழி முறை – நண்பர்கள், உறவினர்கள், கிராமியக் கடன் ஈவோர் மூலம் பெறப்பட்ட நிலை மாறி, அரச மற்றும் தனியார் வங்கிகள், சிக்கனக் கடன் உதவிச் சங்கங்கள், சமுர்த்தி வங்கி, நுண்பாக நிதியிடல் (Micro Credit Finance) போன்றவற்றின் மூலம் நிதியிடல் இடம் பெற்றுவருகின்றது.

தயாரிப்பு முறையை எடுத்துக் கொண்டால், மரபு வழி உற்பத்தி முறைகள் மங்கி மறைந்து பதிலாக நவீன உற்பத்தி முறைகளும், இயந்திரங்களின் அறிமுகமும் ஏற்பட்டுள்ளன. இதற்கு ஏற்ப பயிற்சி பெற்ற அல்லது நுட்பத்திறன் பெற்ற ஊழியத்தின் தேவையும் கூட ஏற்பட்டுள்ளது.

சந்தைப்படுத்தலைப் பொறுத்தவரையில் இதுவரை காலமும் முடிவுப் பொருட்கள் அரிதாகவே மாவட்டத்துக்கு அப்பால் எடுத்துச் செல்லப்பட்ட நிலை மாறி நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் எடுத்துச் செல்லும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

மேற்படி மாற்றங்களால், அதுவரை சமூகங்களிடையே இருந்து வந்த பரஸ்பர தங்கியிருப்பும் சார்பு நிலையும் தகர்ந்து விட்டது. உற்பத்தி முதல் சந்தைப்படுத்தல் வரை சமூக இடைவெளி அதிகரித்துக் கொண்டு சென்றது. இதனால், வேலையின்மை பெருக்கமடைந்து உள்நாடு மாத்திரமன்றி வெளிநாடு நோக்கிய ஊழிய நகர்வை இது தூண்டியது. இச் செய்முறை விவசாய உற்பத்திக் கட்டமைப்பில் பெண்களின் சார்பு ரீதியான பங்களிப்பை நேர்க்கணியத்தில் அதிகரிக்கச் செய்துள்ளது.

தற்காலிக இடப்பெயர்வும் கூட நீண்ட காலத்தில் நிரந்தரக் குடியேற்றம் என்ற நிலைக்கும் இட்டுச் சென்றது. இச் செய்முறை இன ரீதியான சமநிலையைப் பாதிக்கச் செய்ததுடன் ஊழியப் பற்றாக் குறையை ஏற்படுத்தியது. சென்று சேர்ந்த இடங்களில் கிடைத்த உதவிகளும் அங்கு கிடைத்த தொழில் வாய்ப்புக்களும் இந் நிலைமையை ஊக்குவித்திருந்தன. மேலும், இனப்பிரச்சினை தோற்றுவித்த பாதுகாப்பு கெடுபிடிகளும், பரஸ்பர அவநம்பிக்கைகளும் கூட இடம்பெயர் ஊழியர்களை மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு மீளவும் திரும்புவதை தாமதப்படுத்திவிட்டன.

நுகர்வோரைப் பொறுத்தவரையிலும் கூட இன முரண்பாடானது, மரபு வழி உற்பத்திகளை நுகர்வதிலிருந்தும் படிப்படியாக விலகியிருக்கச் செய்தது. புதிய பல உற்பத்திகள் மாவட்டத்துக்குள் மேற்கொள்ளப்பட்டதுடன் இறக்குமதிப் பொருட்களும் தாராளமாகச் சந்தைகளில் கிடைத்தன. ஏற்கனவே, தொழில் ரீதியான பிளவு அதிகரித்து விட்டிருந்த நிலைக்கு அப்பால் நுகர்வு ரீதியிலான பிளவும் கூட இப்போது ஏற்பட்டுள்ளதையே இது எடுத்துக் காட்டுகிறது. எனவே, தமது உற்பத்திகளுக்கான புதிய சந்தைகளை அல்லது மாற்றுச் சந்தைகளை உற்பத்தியாளர்கள் தேடிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தினை இச் சூழல் ஏற்படுத்தி விட்டது.